4. கவன ஈர்ப்பு

திருத்துறைப்பூண்டி, அருள்மிகு பிறவி மருந்தீஸ்வரர் ஆலயத் திருக்குளங்கள்–தூர் வாருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு திரு. பழனிசாமி அவர்கள் (குறுக்கீடு) மாண்புமிகு திரு. பழனிசாமி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பை மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி நகரம், அருள்மிகு பிறவி மருந்தீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான திருக்குளங்களைத் தூர் வார அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்:

அறிக்கை

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம் மற்றும் நகர், அருள்மிகு பிறவி மருந்தீஸ்வரர் (பவஔஷதீஸ்வரர்) திருக்கோயில், சட்டப் பிரிவு 46(ii)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில், சட்டப் பிரிவு 45(i)-ன்கீழ் நியமிக்கப்பட்ட 2-ம் நிலை செயல் அலுவலரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் 1412 ஆம் பசலி உதவித் தொகை நிர்ணய வருமானம் ரூ.11,00,820 ஆகும். இத்திருக்கோயிலுக்கு நிலங்கள் நஞ்சை, ஏக்கர் 350.73; புஞ்சை, ஏக்கர் 114.59; கட்டடங்கள் 22, மனைகள் 535 சொந்தமாக உள்ளன. இத்திருக்கோயிலுக்கு வெளியே திருத்துறைப்பூண்டி நகரில் திருக்கோயிலுக்குச் சொந்தமான 6 குளங்கள் உள்ளன. இந்த 6 குளங்களும் பொது மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

[திரு. பி.சி. ராமசாமி] [2003 ஏப்ரல் 7

இத்திருக்குளங்கள் 6-ஐயும் தூர் வாரி ஆழப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

வ. எண்	திருக்குளம் பெயர்	சர்வே எண்	விஸ்தீர்ணம் ஏக்கர்/ சென்ட்
1.	பெரிய குளம் (சன்னதி குளம்)	184/4	4.44
2.	தோட்டத்துக் குளம்	180/11	0.44
3.	ரொக்கக் குத்தகைக் குளம் (புதுக் குளம்)	263/6	0.74
4.	தேவடியான் குட்டை	183/7	0.22
5.	அய்யனார் குட்டை	159/10	0.10
6.	இராமர் மடத்துக் குளம்	183/2	1.70

மேற்படி திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால், இத்திருக்குளங்களில் தூர் வாரும் பணியினை, திருக்கோயில் நிதியில் செய்ய இயலாத நிலை இருந்து வருகிறது. மேற்படி திருக்குளங்கள் பொது மக்களுக்குப் பெரிதும் பயன்படுவதாக உள்ளதால், முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்து தூர் வாரி மராமத்து செய்திடவும், பொது நன்மையைக் கருதி சிறப்பு இனமாகப் பாவித்து, உள்ளாட்சி அமைப்புகள் மூலமாகவோ, ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாகவோ, கிராமத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகவோ தூர் வாரிக் கொடுக்க மாவட்ட ஆட்சியரைக் கேட்டுக்கொண்டதற்கு, மேற்படி திட்டங்களில் நிதி வசதிக்கேற்ப நடவடிக்கை எடுப்பதாக மாவட்ட ஆட்சியரால் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி திருக்கோயில் திருக்குளம் தூர் வாருவது சம்பந்தமாக 21-11-2002 அன்று உறுதிமொழிக் குழு பார்வையிட்டுச் சென்றுள்ளது. அதன் பிறகு, 4-12-2002 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தின்போது தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் மேற்படி பணியினை மேற்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியரால் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. எனினும், தன்னார்வத்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

தொண்டு நிறுவனங்கள் மேற்படி பணியினை மேற்கொள்ள முன்வரவில்லை.

தற்பொழுது சன்னதி குளம் என்ற பெரிய குளம் இலாகாப் பொறியாளரைக் கொண்டு அளவீடுகள் செய்து, உத்தேச மதிப்பீடு ரூ.18.89 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலின் திருக்குளங்களை "சம்பூர்ண கிராமின் ரோஜ்கார் யோஜனா", 2002-2003, சிறப்புப் பணித் திட்டத்தின்கீழ் தூர் வார நடவடிக்கை எடுக்க திருவாரூர் மாவட்ட ஆட்சியர் 16-2-2003 அன்று அறிக்கை மூலமும், நேரிலும் தஞ்சாவூர் இணை ஆணையரால் கேட்டுக்கொள்ளப்பட்டு, தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பழனிசாமி, ஏதாவது கேள்வி கேட்க வேண்டுமென்றால் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் தாமதமாக வந்தீர்கள். இன்னும் அறிக்கையைப் படிக்கவில்லை என்று கருதுகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் வந்த டிரெயின் காலதாமதமாக வந்தது. காலத்தோடு வர முடியவில்லை. 12½ மணி நேரமாக வந்து கொண்டிருந்தோம். என் சார்பாக தோழர் சிவபுண்ணியம் கேள்வி கேட்பார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேட்கக் கூடாது. கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்தவர்தான் விளக்கம் கேட்கலாம்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2003 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 142 முதல் 145 வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.